13

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE UNIT OF M/S. THIRUPATHI BLUE METAL & M-SAND AT S.F.No. 6/1,7/2,7/3 & 7/4 of ENTHOOR VILLAGE, MARAKANAM TALUK, VILLUPURAM DISTRICT ON 21.09.2023 AT M/S.A.M.S MAHAL, MURUKERI VILLAGE, MARAKANAM TALUK, VILLUPURAM DISTRICT.**

**Present:**

1. **Tmt.M.Parameswari** : District Revenue Officer, Viluppuram District
2. **Thiru.Er.M.Selvakumar** : District Environmental Engineer Tamil Nadu Pollution Control Board Viluppuram

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Viluppuram.**

District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Villupuram has welcomed the District Revenue Officer, Government officials, Environmentalists and the Public present in the public hearing conducted on behalf of Tamilnadu Pollution Control Board and also informed that the proposed project of Rough Stone & Gravel Quarry owned by M/s. Thirupathi Blue Metal & M-sand to an extent of 2.85.0 Hectare at SF Nos.6/1,7/2,7/3 &7/4 of Enthoor Village, Marakkanam Taluk, Villupuram District falls under the B1 Category and Schedule 1A of Environment Impact Assessment (EIA) Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change, therefore it is necessary to conduct public hearing to obtain Environmental Clearance for the quarry projects from the State Environment Impact Assessment Authority (SEIAA).

The public hearing meeting for M/s. Thirupathi Blue Metal & M-sand to an extent of 2.85.0 Hectare at SF Nos.6/1,7/2,7/3 &7/4 of Enthoor Village, Marakkanam Taluk, Villupuram District is being conducted based on EIA Notification dated: 14.09.2006 published by Ministry of Environment and Forest Climate Change New Delhi.

Press release for this public hearing meeting was published in Times of India and Daily Thanthi newspapers dated on 19.08.2023 with the approval of the District Collector, Villupuram for conducting of public hearing meeting on 21.09.2023 at 12.00 PM.

In this regard, District Environmental Engineer, requested to express their views one by one in a peaceful manner and also in writing.

Further District Environmental Engineer has requested the project consultant to present the project details.

**Technical Presentation, M. Shaik Nawas, M.E., Environmental Consultant, GEO Exploration & Mining Solutions, Salem**

Project Consultant, GEO Exploration & Mining Solutions, Salem, has presented the details of the project of M/s.Thirupathi Blue Metal & M-sand Rough Stone and Gravel Quarry through power point presentation.

**District Environmental Engineer,TNPCB,Viluppuram.**

He has requested the public to inform their name and village before speaking to express their suggestions, concerns and queries about this project and also assured that their views will be recorded and forwarded to the State Environment Impact Assessment Authority.

**1. Mr. Sankar, Enthoor Village**

He informed that,

My land is located 300 meters away from the crushers. Since the water is being stored in the mining activity there is no water scarcity. They have developed green belt more than 50 acres around our field hence the surrounding is environmental friendly. The drivers and labours will be employed by this proposed quarry owners which makes benefit to our village

**2. Mr. Suresh, Mandaperumpakkam Village**

He informed that,

Since the quarry is located 1 km away from our village we have not issue for setting up the proposed quarry . The distance between the village and the quarry is far away. Around 20 to 30 people from our village were working in the quarry. He said that it will be of great help in improving the economy of their family.

**District Revenue Officer, Villupuram**

They asked if any women wants to comment about this project.

**3. Tmt. Sivagami, Mandaperumpakkam**

She informed that,

We work in this quarry. She said that due to the establishment of this quarry, we do not have any objection.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Viluppuram.**

He thanked to the District Revenue Officer and all the public and NGOs who have participated in the public meeting.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Daily Newspaper Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing (Total pages 3 & 28 persons).
3. Copy of Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Villuppuram.

District Revenue Officer,
Villupuram.

**விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், எந்தூர் கிராமம், ச. எண். 6/1, 7/2, 7/3, & 7/4, தி/ள். திருப்பதி புளூ மெட்டல் & எம்-சாண்ட் நிறுவனத்தின் திட்ட பணிக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் 21.09.2023 அன்று பிற்பகல் 12.00 மணியளவில் தி/ள். A.M.S மஹால், முருக்கேரி கிராமம், மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரம்:**

பங்கேற்றோர்:

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. M. பரமேஸ்வரி | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>விழுப்புரம் |
| 2. | Er. மு. செல்வகுமார் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்**

வருகை புரிந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை வரவேற்று,

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், எந்தூர் கிராமம், ச. எண். 6/1, 7/2, 7/3, & 7/4, ல் 2.85.00 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட தி/ள். திருப்பதி புளூ மெட்டல் & எம்-சாண்ட் நிறுவனமானது, குவாரியை இயக்குவதற்கு மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுசூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இன்று நடைபெற உள்ளது. சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன் படி 5.00 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூகநல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். திருப்பதி புளூ மெட்டல் & எம்-சாண்ட் நிறுவனத்திற்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். A.M.S மஹாலில் 21.09.2023 அன்று பிற்பகல் 12.00 மணியளவில் நடைபெறுமென டைம்ஸ் ஆப் இந்தியா மற்றும் தினத்தந்தி செய்திதாள்களில் 19.08.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவித்துக்கொள்ளலாம் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்திற்கு மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை தலைமையேற்று நடத்தி தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்.

தொழில்நுட்ப விளக்க வல்லுநர், M. ஷேக் நவாஸ், எம், இ., GEO Exploration & Mining Solutions, சேலம்

திட்ட ஆலோசகர், தி/ள். திருப்பதி புளு மெட்டல் & எம்-சாண்ட் திட்டம் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்

பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்களுடைய கருத்துகளை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டார்.

1. திரு. சங்கர், ஏந்தூர் கிராமம்

இவர் கூறுகையில்,

கிரஷரிலிருந்து 300 மீட்டர் தள்ளி என்னுடைய நிலம் இருக்கிறது. இதனால் தண்ணீர் பிரச்சனை சம்மந்தப்பட்ட குறை எதுவும் இல்லை. குவாரியிலிருந்து உருவாகும் தண்ணீர் சுற்றிலும் தேக்கி வைப்பதால், தண்ணீர் பிரச்சனை எதுவும் எங்களுக்கு இல்லை. 50 ஏக்கருக்கு மேல் மர கன்றுகள் சுற்றி எங்கள் வயலுக்கு அருகில் வைத்து இருக்கிறார்கள். அதனால் சுற்றுசூழலுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் குளிர்ச்சியாக வைத்து இருக்கிறார்கள். இதனால் எந்தவித பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்துக்கொண்டார். மேலும், எங்கள் கிராம மக்கள் 50 லிருந்து 100 பேர் வரை எங்கள் வயல் வழியாக தான் வேலைக்கு செல்கிறார்கள். குவாரி வேலைக்கும், டிரைவர் வேலைக்கும் எங்கள் ஊரில் இருந்து தான் செல்வதால், எங்கள் ஊருக்கு நன்மையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டார்.

2. திரு. சுரேஷ், மண்டபெரும்பாக்கம் கிராமம்

இவர் கூறுகையில்,

குவாரியானது எங்கள் கிராமத்திலிருந்து 500 மீட்டரிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரம் தாண்டி இருக்கிறது. ஆகையால், குவாரி அங்கு இருப்பதால் எங்களுக்கு பெரிதும் எந்தவித பாதிப்பும் இல்லை. கிராமத்திற்கும் குவாரிக்கும் தூரம் அதிகமாக தான் உள்ளது. அதே போல ஊரிலிருந்து 20 முதல் 30 பேர் வரை குவாரி வேலைக்கு செல்கிறோம். அதனால் அவர்கள் குடும்பத்தினுடைய பொருளாதாரம் மேம்பட பெரும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர், விழுப்புரம்

மகளிர் யாராவது கருத்து கூற விரும்பினால் கூறலாம் என்று கேட்டுக்கொண்டார்.

19

*3. சிவகாமி, மண்டபெரும்பாக்கம் கிராமம்*

நாங்கள் இந்த குவாரியில் வேலை செய்கிறோம். இந்த குவாரி அமைவதினால் எங்களுக்கு எந்தவித ஆட்சியேபனையும் இல்லை என்று தெரிவித்துக்கொண்டார்.

*மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்*

திரு. திருப்பதி புளூ மெட்டல் & எம்-சாண்ட் நிறுவனத்தின் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றதாக தெரிவித்துக்கொண்டார்.

இந்த கருத்து கேட்பு கூட்டத்தை சிறப்பாக நடத்தி கொடுத்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் பொது மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார். இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் வட்டாட்சியர் அவர்களுக்கும், பொது மக்கள் மற்றும் பத்திரிக்கை நண்பர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

**இணைப்பு:**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்த கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் (மொத்த பக்கம் 3 மற்றும் நபர்கள் 28)
3. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்

29/9/2023

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

29/9/23

மாவட்ட வருவாய் அலுவலர்,
விழுப்புரம்.